Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




# மார் தோமாவின் நினைவு நாள்

ஜூலை
**3**

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press**
Diocese of Marthandam
Mob : +91 94-42-469852

# Bulletin

**Diocese of Marthandam**
மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



ஜூலை **15**

## இறை ஊழியர் மார் இவானியோஸ் தினம்

மலர் 19 ஜூலை 2022 இதழ் 7

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.07.2022 | Friday | 11.00 am<br>6.00 pm | Bank Opening<br>Holy Mass | Nagercoil<br>Themanoor |
| 02.07.2022 | Saturday | 5.30 pm | Holy Mass | Kaduvakuzhi |
| 03.07.2022 | Sunday | 6.30 am<br>10.00 am<br>4.00 pm | Holy Mass<br>Holy Mass<br>Holy Mass | Nalanchira<br>Ambilikonam<br>Koikalthoppu |
| 05.07.2022 | Tuesday | 10.30 am<br>5.00 pm | Placement day 2022<br>Holy Mass | Annai Velankanni College, Kanyakumari<br>Tomb Chapel, Pattom |
| 07.07.2022 | Thursday | 10.00 pm | Jubilee – Concluding Celebration | MIDS |
| 08.07.2022 | Friday | | Holy Mass & Final Profession<br>Leaders Training Camp | Shanthi Ashramam<br>Trivandrum |
| 09.07.2022 | Saturday | | Holy Mass | Trivandrum – Renewal Centre |
| 10-13.07.22 | Sunday - Wednesday | | TNBC | Velankanni |
| 14.07.2022 | Thursday | | Synod- SMCC | Trivandrum |
| 15.07.2022 | Friday | | Mar Ivanios Day | Trivandrum |
| 24–29.07.2022 | | | Recollection for Priests | Vijayapuram - Kottayam |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 ஜூலை 2022 இதழ். 7

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE
## DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*



# இளம் குருமடச் செய்திகள்

**பயிற்சி வகுப்பு**

குருமடத்தில் புதிதாக இணைய விரும்புகின்ற மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பானது 02-06-2022 அன்று தாபோர் தியான இல்லத்தில் வைத்து குருமட அதிபர் பேரருட்தந்தை ஜோஸ் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைப்பெற்றது.

**இணை அதிபர் மற்றும் புதுகுருமாணவர்கள் வருகை**



தூய எப்ரேம் இளம் குருமடத்தின் புதிய இணை அதிபராக அருட்தந்தை அஜீஷ் ஜோகன் அவர்கள் 12-06-2022 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவ்வருடம் இளம் குருமடத்தில் 8 குருமாணவர்கள் புதிதாக வருகை புரிந்துள்ளனர்.

**புதுகுருமாணவர்களின் விபரம்**

1. Br. Jeejo Jerin - Chellamkonam
2. Bro. Nithin - Manjathopu
3. Bro. Anto Jenith Paul - Kidarakuzhi
4. Bro. Subin - Pinkulam
5. Bro. Gatlin Jude - Themanoor
6. Bro. Angelo - George Nagar
7. Bro. Rejin - Sooriyacode
8. Bro. Jeenu - Marthandam



# குருக்களின் செய்தி



குருக்களுக்கான மாதாந்திர தியானம் ஜூன் மாதம் 7-த் தேதி ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. தியானத்தை தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதன்மை குருவாய் சீரிய முறையில் பணிசெய்த பேரருள் தந்தை S. வர்கீஸ் அடிகளார் அவர்களுக்கு நன்றியும், புதிதாக நியமனம் பெற்ற முதன்மை குரு Msgr. ஜோஸ் பிறைட் மற்றும் மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களுக்கும் குருக்கள் சார்பான வரவேற்பும் வழங்கப்பட்டது. ஆயர் முன்னிலையில் பணிப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள்.

கூட்டியக்க திருஅவை குறித்தான வகுப்புகள் மறைமாவட்ட குருக்களுக்கு ஜூன் மாதம் 21-ஆம் தேதி அருள்பணி முனைவர் செ. மைக்கில் ராஜ் அவர்களின் வழிகாட்டுதலில் நடத்தப்பட்டது.







5 வருடம் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதன்மை குருவாக பணியாற்றிய பேரருட்தந்தை **S.** வற்கீஸ் அவர்களுக்கு மறைமாவட்டத்தின் சார்பாக நன்றி.





மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதன்மை குருவாக பொறுப்பேற்ற மோண். ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்களுக்கு மறைமாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களும் வரவேற்பும்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆவண காப்பாளராக பொறுப்பேற்ற பேரருட்தந்தை பிராங்ளின் ஜோஸ் அவர்களுக்கு மறைமாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களும் வரவேற்பும்.



# மேரி மக்கள் துறவற சபை

## முதல் மற்றும் இறுதி வார்த்தைப்பாடு நிகழ்வுகள்



மேரி மக்கள் துறவற சபையின் சூசையப்பர் மாகாணத்தின் இவ்வருட துறவற வார்த்தைப்பாடு நிகழ்வுகள் 28-05-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

Sr. ஏஞ்சலின் பியோ (இறச்சக்குளம்) Sr. அனிதா மேரி (திருச்சி) Sr. ஜோசப்பின் (இளையாங்கண்ணி) Sr. ஷீபா கார்மலின் (இளையாங்கண்ணி) Sr. லூர்து லீலா (இளையாங்கண்ணி) ஆகியோர் முதல் வார்த்தைப்பாட்டையும், அருட்சகோதரி ஜெர்லின் போள் (இளையாங்கண்ணி) இறுதி வார்த்தைப்பாட்டையும் பெற்றுக் கொண்டார்கள். இதில் மேரிமக்கள் தலைவி மதர் லிடியா, புனித சூசையப்பர் மாகாணத்தலைவி மதர் அனிலா கிறிஸ்டி மற்றும் ஏராளமான அருட்தந்தையர் அருட் சகோதரிகள் கலந்து கொண்டனர்.

## Plenary Assembly

மார்த்தாண்டம் மாகாணத்திற்கு உட்பட்ட அனைத்து துறவற இல்லங்களின் தலைமை அருட்சகோதரிகளுக்கான கூட்டம் 10, 11, 12 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றது. இதில் பேரருட்தந்தை மாத்யூ ஜக்கப் திருவாலில் OIC வகுப்புகள் நடத்தினார்கள்.

## வருடாந்திர தியானம்



மேரி மக்கள் துறவற சபையின் வருடாந்திர தியானம் 19-06-2022 முதல் 26-06-2022 வரை நடைபெற்றது. இதில் 45 அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். அருட்தந்தை ஜிசன் போள் அவர்கள் வழிநடத்தினார்கள்.



## பிரியாவிடை மற்றும் வரவேற்பு நிகழ்வு



மார்த்தாண்டம் மாகாணத் தாய் இல்லத்தின் Chaplain S. வற்கீஸ் அவர்களுக்கு 09-06-2022 அன்று பிரியாவிடையும். புதிதாக பெறுப் பேற்ற குருகுல முதல்வர் ஜோஸ்பிறைட் அவர்களுக்கு 10/06/2022 வரவேற்பும் வழங்கப்பட்டது.



## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜூலை** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **22, 23** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# வாழ்த்தப்பட்ட நெமேசியா வாலே திருநாள் கொண்டாட்டம்



### வாழ்க்கை வாழ்வதற்கே

பிறரில் கடவுளை கண்டு, அவர்களை முழுமையாக நேசிக்கும் பொருட்டு 1866 செப்டம்பர் திங்கள் 8-ம் நாள் Sisters of charity of St. Jeanne Antide Thourest துறவற குடும்பத்தில் தன்னை இணைத்தவர். தான் வாழ்த்தப்பட்ட நெமேசியா வாலே. தன்னுடைய வாழ்க்கைக்கு எப்போதும் இறைவனில் அர்த்தம் கண்டவர். ஏழை எளிய மக்களை நேசித்து, படிப்பறிவற்ற பாமர மக்களுக்கு அன்பாலே கல்வி புகட்டி சிறந்தோங்கி வாழ்ந்த இவர் 1916-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தியதி நிலை வாழ்வை சுவைத்தார். இவருடைய புண்ணிய வாழ்க்கையை ஓர் எடுத்துக்காட்டாய் கண்ட திருச்சபை அவருடைய பிறந்த நாளான ஜீன் 26-ம் தியதியை அவருடைய திருநாளாக கொண்டாடும் பொருட்டு அன்று அவரை அருளாளராக உயர்த்தியது. இதன் பொருட்டு, எமது அனைத்து துறவற இல்லங்களும் திருப்பலி சிறப்பித்து மகிழ்ந்தது. அத்தோடு, அவருடைய பெயரை தாங்கும் எமது கல்வி கூடமானது பல்வேறு நிகழ்ச்சிகளை நிகழ்த்தி சிறப்பித்தது.








Mary Mount CBSE School ஜூன் 13,2022 அன்று தனது ஏழாம் கல்வியாண்டை மகிழ்வுடன் தொடங்கியது. புதிதாக நியமிக்கப்பட்ட தாளாளர் பேரருட் தந்தை. பிராங்கிளின் ஜோஸ், இணைதாளாளர் அருள்தந்தை ஜாண் ஷிபு, ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை விபின்ஸ் வில்சன், தலைமையாசிரியை அருட்சகோதரி அல்போன்ஸ் மற்றும் இரண்டு ஆசிரியைகள் ஆகியோர் மாணவர்கள் முன்னிலையில் வரவேற்று கவுரவப்படுத்தப்பட்டனர்.



### சுற்றுச்சூழல் தினம்

27 ஜூன் 2022 அன்று சுற்று சூழல் தினம் பள்ளியில் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் அனைவரும் பல்வேறு தலைப்பின் கீழ் விதவிதமான செடிகளை கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டனர். இணைத்தாளாளர் அருட்தந்தை ஜாண் ஷிபு, ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை விபின்ஸ் வில்சன் தலைமையில் அனைத்து செடிகளும் பள்ளி வளாகத்தில் நடப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் மாணவர்கள் சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் பற்றி தெளிவாக அறிந்து கொண்டனர்.





# பெதனி நவஜீவன் CBSE மேல்நிலைப்பள்ளி

## பெதனிநகர், வேங்கோடு



பெதனி நவஜீவன் கல்வி நிறுவனத்தில் 2022-2023-ஆம் கல்வியாண்டின் தொடக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. இதில் பாலர் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலும் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது ஜெபவழிபாடோடு தொடங்கப்பட்டது. பெதனிநவஜீவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் தாமஸ் OIC அவர்கள் பெதனியின் சிறப்பை தனதுவாழ்க்கை அனுபவத்தோடு விளக்கினார்.



பெதனி கல்வி நிறுவனத்தின் தாளாளர் பேரருட்தந்தை ஜாண் கிறிஸ்டோபர் OIC மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்களுக்கு பள்ளியின் விதி முறைகள் குறித்து விளக்கினார். மேலும் மாணவர்கள் அனைவரும் எதாவது ஒரு துறையில் சாதிக்க வேண்டும் என்றும் அறிவுரையும் கூறினார்.





# LITTLE FLOWER MATRICULATION SCHOOL

## PUSHPAGIRI



The new academic year 2022 - 2023 commenced on June 15th. All the students were warmly welcomed.

As a preparation for the Kindergarten kids, 3 days summer camp was conducted for them to get familiar with the school campus and to know each other. The camp was organised under the guidance of Kindergarten Garten teachers.



On June 18th training workshop was organised for the teachers. Resource persons from Macmillan Ms. Durga and Mr. Nallaperumal took classes based NEP parameters 2020 and Altura



On June 18th we commemorated World Refuge Day. A student representative delivered a speech on the significance of the day and Tamil Department conducted the drama, on the Topic 'அகதிகளை ஆதரிப்போம்'



On June 21st Yoga day was celebrated, the students gathered in the school auditorium and performed yoga under the guidance of yoga master Mr.Sajin Robince. As an introduction he explained about the benefits of doing yoga regularly .

# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

### விளையாட்டு தினம்

மலங்கரை கத்தோலிக்க கல்லூரியின் 24-வது விளையாட்டு தினம் 06.06.2022 அன்று சூரியகோடு புனித எப்ரேம் ம.சி.க மேனிலைப்பள்ளியில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினாராக இந்திய அணி முன்னாள் கூடைபந்து வீரரும் இந்திய இரயில்வே வணிகவியல் மேற்பார்வையாளராக செயல்படும் திரு. சிவராஜன் அவர்கள் வருகைபுரிந்து விளையாட்டின் சிறப்பு தன்மையயை பற்றியும் மாணவர்களின் விளையாட்டு திறமையையும் பற்றியும் கூறி விளையாட்டு தினத்தை துவக்கி வைத்தார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் தம்பிதங்ககுமரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கல்லூரிதாளாளர் பேருட்தந்தை அருள்தாஸ் அவர்களும் நிதிகாப்பாளர் பேரருட்தந்தை இராபின்சன் அவர்களும் முன்னிலை வகித்தார்கள். விழா ஏற்பாடுகளை கல்லூரியின் விளையாட்டு துறை செய்திருந்தது.

### கலைவிழா

17.06.2022 அன்று கல்லூரியின் 24-வது கலை விழாவானது மிகச் சிறப்பாக நடைபெற்றது. புனித எப்ரேம் இளம் குருமட இணை அதிபர் அருட்தந்தை அஜீஷ் ஜோகன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் கலைத்திறனின் வெளிப்பாட்டை விளக்கி கலை விழாவினை துவக்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினராக மலையாள பட நடிகர் திரு சஜன்





பல்லுருத்தி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் திறனை வெளிக்கொணர கலையானது முக்கிய பங்கினை வகிக்கிறது என்று வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்புரையாக கல்லூரியின் நிதிகாப்பாளர் பேரருட்தந்தை இராபின்சன் அவர்கள் கலையின் முக்கியதுவத்தை எடுத்துக்காட்டினார். கலைவிழா முடிவுற்றதும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பல்வேறு அரங்கில் நடைபெற்றது. கலைவிழாவில் இயற்பியல் துறையானது அதிகபுள்ளிகளை பெற்றுமுதலிடம் பெற்றது.

### கல்லூரி ஆண்டுவிழா

கல்லூரியின் ஆண்டுவிழாவானது 18.06.2022 அன்று கல்லூரியின் தலைவரும் மேலாளருமான மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கல்லூரிதாளாளர் பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் வரவேற்புரை வழங்க கல்லூரி முதல்வர் முனைவர் தம்பி தங்ககுமரன் அவர்கள் ஆண்டறிக்கையை சமர்பித்தார்கள். விழாவில் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற கூடுதல் ஆணையர் திரு. ஜேக்கப் பொன்னூஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள். கல்லூரியின் முதல் தாளாரளர் பேரருட்தந்தை பிரேம் குமார் முன்னாள் தாளாளரும் குருகுல முதல்வருமாகிய பேரருட்தந்தை ஜோஸ் பிறைட், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் திரு. ராஜேஷ் குமார் மற்றும் பெற்றோர் ஆசிரிய மன்ற தலைவர் திருமதி பாதேவ் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள். பல்கலைகழக அளவில் முதலிடம் மற்றும் தரவரிசையில் இடம் பிடித்தோர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



# ஆயரின் நாமவிழா கொண்டாட்டங்கள்





















# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## மார்த்தாண்டம் மத்திய சபை

### 56-வது தலைவர் பணியேற்பு விழா

மார்த்தாண்டம் மத்திய சபையின் 4-வது வின்செனட் தே பவுல் முதன்மை பணியாளராக பணிபுரிந்த சகோ. P. வற்கீஸ் அவர்கள் பணி காலம் முடிவடைந்ததால், 5-வது புது தலைவர் சகோ. இயேசு ராஜன் அவர்கள் பணியேற்பு நிகழ்வானது 04-06-2022 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் கிறிஸ்து அரசர் பேராலயம் மார்த்தாண்டத்தில் வைத்து மறைமாவட்ட மேதகு ஆயர் முனைவர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் மத்திய சபை ஆன்மீக ஆலோசகர் Rev. Fr. G. வற்கீஸ் முன்னாள் தலைவர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அருட்தந்தையர்களாக பேராலய பங்குத்தந்தை Ver.Rev. Msgr. ஜோஸ் பிரைட், மரியாகிரி வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் Rev. Fr. Vinu Kumar சிறப்பு விருந்தினர்களாக இந்திய தேசிய சபை செயலர் சகோ. சந்தியாகுமாணிக்கம், தமிழ் நாடு பாண்டிச்சேரி வின்செந்திய ஒருங்கிணைப்பாளர் சகோ. வெள்ளத்துரை, இந்திய தேசிய சபை முன்னாள் தலைவர் சகோ. M. சேவியர் ஜேம்ஸ் ராஜ் தக்கலை மத்திய சபை முதன்மை பணியாளர் சகோ. றாபி, குழித்துறை மத்திய சபை முதன்மை பணியாளர் சகோ. பால்ராஜ், குமரி வின்செந்திய கூட்டமைப்பு செயலர் சகோ. எட்வின்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். மத்திய சபை முன்னாள் தலைவர் அனைவரையும், வரவேற்றார். விவிலிய வாசகம் கையோடும் வாசிக்கப்பட்டது. வரவேற்பின் போது மேடையில் அமர்ந்திருந்த அனைவருக்கும் பூங்கொத்து கொடுக்கப்பட்டது. முதன்மை பணியாளராக பொறுப்பேற்க இருக்கும் சகோ.K இயேசுராஜன் அவர்களுக்கு சகோ. வெள்ளத்துரை அவர்கள் பணியேற்று உறுதி மொழி செய்து வைத்தார். அதை தொடர்ந்து மத்திய சபை மற்றும் பொறுப்பாளர்களுக்கு தலைவராக பொறுப்பேற்ற சகோ. K. இயேசு ராஜன் அவர்கள் பணியேற்று உறுதிமொழி கூறினார். பொறுப்பேற்ற அனைத்து பணியாளர்களுக்கும் மேதகு ஆயர் சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் பணியேற்று, ஆவணத்தில்



கையொப்பமிட்டார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் பணி பொறுப்பெற்ற முதன்மை பணியாளரையும் அவரோடு பணி பொறுப்பேற்ற அனைவரையும் வாழ்த்தி ஆசியும் வழங்கினார்கள்.

தொடர்ந்து, இந்திய தேசிய சபை செயலர் சகோ. சந்தயாகு மாணிக்கம், தமிழ்நாடு பாண்டிச்சேரி ஒருங்கிணைப்பார். சகோ. வெள்ளத்துரை, பேராலாய பங்குத்தந்தை தற்போதைய மறைமாவட்ட குருகுல முதல்வருமாகிய மோண். ஜோஸ் பிரைட் அவர்களும் மறைமாவட்ட வின்செனட் தே பவுல் சங்க ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை G. வற்கீஸ் அவர்களும், மரியாகிரி வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை வினுகுமார் அவர்களும், இந்திய தேசிய சபை முன்னாள் துணை தலைவர் சகோ. M. சேவியர் ஜேம்ஸ் ராஜ், மத்திய சபை முதன்மை பணியாளர்கள் சகோ. றாபி, சகோ. பால்ராஜ், குமரி வின்செந்திய கூட்டமைப்பு செயலர் சகோ. எட்வின் சன், மற்றும் சூழால் பஞ்சாயத்து தலைவரும், பாவிளை வட்டார சபை தலைவருமான சகோ. கிறிஸ்டல் ஜாண் ஆகியோரும் புது தலைவரை வாழ்த்தி பேசி சிறப்பித்தார்கள். தொடர்ந்து புது முதன்மை பணியாளர் ஏற்புரையும், தனது திருமண நாளில் மத்திய சபையின் முதன்மை பணியாளராக பொறுப்பெற்றதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். இறுதியாக மத்திய சபையின் முன்னாள் செயலர் சகோ. இராமசுவாமி அனைவருக்கும் நன்றி கூறினார். தொடர்ந்து மத்திய சபை பெண்கள் பிரதிநிதிகள், சகோதரி அல்போன்சாள், சகோதரி செல்மா, சகோதரி மரிய சுதா ஆகியோரால் இறுதி செபம் சொல்லப்பட்டு தந்தையர்களின் ஆசியோடு பணியேற்பு விழா நிகழ்வு முடிவுற்றது. அனைவருக்கும் தேனீரும் வழங்கப்பட்டது.



# MCYM

## Youth Apostolate

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு இளையோர் இயக்கம் மற்றும் MIDS இயக்கம் இணைந்து நடத்தும் காய்கறி தோட்டம் அமைக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு 04-06-2022 அன்று MIDS அலுவலகத்தில் வைத்து திரு. ஜூலியட் பாண்டியன் அவர்கள் 'நம் மண்ணின் உணவு நமக்கென்றும் வாழ்வு' என்ற மையச் சிந்தனையில் கருத்தரங்கை வழிநடத்தினார். நிகழ்வின் போது போட்டியாளர்களுக்கு விதைகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பேரருட்தந்தை அருள்தாஸ், மார்த்தாண்டம் சமூக சேவை மையம் இயக்குநர் பேரருட்தந்தை ஜான் குமார், மறைமாவட்ட இளையோர் இயக்கம் இயக்குநர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட் மற்றும் இளையோர்கள் கலந்து கொண்டனர்.

அழகியமண்டபம் மறைவட்டத்திலிருந்து இளையோர்கள் 12-06-2022 அன்று தேவதானப்பட்டி மறைப்பரப்பு மையத்தை சந்தித்தனர். இந்நிகழ்வில் மறைமாவட்ட இளையோர் இயக்கம் இயக்குநர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட், ஊக்குனர் அருள் சகோதரி பிளவர் ஜாண், அழகிய மண்டபம் மறைவட்ட இளையோர் இயக்கம் இயக்குநர் அருட்தந்தை ஜான் சிபு, ஊக்குனர் அருள் சகோதரி மரிய ஜோஸப் மற்றும் மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். தேவதானப்பட்டி மறைப்பரப்பு மையத்தை வழிநடத்தும் அருட்தந்தை சஜித் பிரான்ஸிஸ் அவர்கள் அங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளையும், அவர்களின் பழக்கவழக்கங்கள் பற்றியும் இளைஞர்களுக்கு எடுத்து கூறினார். இந்த நிகழ்வு இளையோர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைந்தது.









# MCA

## Diocese of Marthandam

### MCA கூடுகை



12.6.2022 அன்று MCA கூட்டமானது பூவாரில் வைத்து மாலை 4 மணிக்கு நடைப் பெற்றது. அன்றைய தினம் அருட்தந்தை ஜோஸ் பென்னட் அவர்கள் MCA Director பொறுப்பிலிருந்து மாறுதலாகி செல்வதால், MCA பொறுப்பாளர்கள் மற்றும் MCA செயற்குழு உறுப்பினர்கள் அனைவராலும் அருட்தந்தை ஜோஸ் பென்னட் அவர்களுக்கு நன்றிகளும் மேலும் அவர் பணி சிறக்க வாழ்த்துகளும் கூறப்பட்டது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## கல்வி உதவித்தொகை வழங்குதல்

தளிர்கள் உலக மாணவர்களுக்கு மிட்ஸ் நிறுவனம் வழியாக ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வருடத்திற்கான முதல் கட்ட கல்வி உதவி தொகையானது 23-05-2022 அன்று நடைக்காவு ஆலயத்தில் வைத்தும், 25-05-2022 அன்று மிட்ஸ் மண்டல அலுவலகம் பெருவிளையில் வைத்தும், 27-05-2022 அன்று மிட்ஸ் அலுவலகம் கழுவன்திட்டையில் வைத்தும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுகளை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இம்மூன்று பகுதிகளிலும் வைத்து மொத்தம் 291 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 7,27,500/- கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.



## வழிகாட்டுதல் பயிற்சி

பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்து மேல்நிலை பள்ளி மற்றும் உயர்கல்வி படிக்க இருக்கும் மாணவ மாணவிகளுக்கு தகுந்த துறையினை தேர்ந்தெடுக்க ஏதுவாக வருடந்தோறும் வழிகாட்டுதல் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 24-05-2022 அன்று பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கும் 02-06-2022 அன்று பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கும் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சியினை திரு.ஆன்றோ சேவியர் (Career Consultant, Kanyakumari) அவர்கள் நடத்தினார்கள். பயிற்சியில் மாணவர்களுக்கு புரியும் வகையில் அனைத்து துறைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. மாணவர்களும் தங்கள் சந்தேகங்களை பயிற்சியாளரிடம் கேட்டு தெளிவுபடுத்தினார்கள். காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்புகளில் மொத்தம் 161 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





## உதவி திட்டங்கள்

1. விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை மண்டலத்தில் செயல்பட்டுவரும் 13 மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 11.06.2022 அன்று மிட்ஸ் தளிர்கள் உலக திட்ட பயனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. தாய்மார்களுக்கு அருட்சகோதரி அல்போன்சா அவர்கள் குடும்ப உறவுகள் குறித்த சிறப்பு பயிற்சி வழங்கினார்கள். மதியத்திற்கு பின் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நல திட்ட பணியாளர்கள் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான தின சிறப்பு நிகழ்வு வழங்கினார்கள். இப்பயிற்சியில் மொத்தம் 230 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

2. 13.06.2022 அன்று CRS மற்றும் தமிழக சமூக பணி மையத்திலுள்ள அலுவலர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்து CTWWC திட்டத்தில் உள்ள குழந்தைகளை சந்தித்து நிறை குறைகளை கேட்டறிந்தனர்



3. மனாஸ் யூனிதாஸ் மற்றும் மிட்ஸ் நிறுவனம் இணைந்து நாவல்காடு மற்றும் மஞ்சத்தோப்பு பகுதிகளில் We Store என்ற பெயரில் புதிதாக துவங்கப்பட்ட கூட்டுத் தொழில் திட்டத்தை மிட்ஸ் இயக்குநர் பேரருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள்.

4. ஜூன் 18,19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் குடும்ப வளர்ச்சி திட்ட தேசிய அலுவலகத்திலிருந்து திரு.சிபின் ஆன்றனி அவர்கள் வருகைதந்து Covid 19 Rehabilitation திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 25 பயனாளிகளை பார்வையிட்டார்கள்.

# மறைவட்ட செய்திகள்

## பனச்சமூடு மறைவட்டம்

**திருவிழாக்கள்:**

புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், கீழ் மாங்கோடு ஆலயத் திருவிழா 16-06-2022 அன்று பங்குதந்தை. ஜோணி ஆல்பிரட் அவர்களால் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 18-06-2022 மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் ஆடம்பர திருப்பலியோடு இனிதே நிறைவுற்றது.

**புனித அலோசியஸ் மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், காஞ்சியோடு**

ஆலயத் திருவிழா 19-06-2022 அன்று பங்குதந்தை ஜோணி ஆல்பிரட் அவர்களின் கரங்களினால் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது 21-06-2022 அன்று பத்தனம்திட்டா முதன்மை குரு பேரருள் தந்தை. ஷாஜி மணிக்குளம் அவர்களின் ஆடம்பர திருப்பலியோடு இனிதே நிறைவுற்றது.



**மரம் நடுவிழா**

ஜூலை 12-ஆம் தேதி மறை வட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும் மரம் நடு விழா கொண்டாடப்பட்டது மறை மாவட்டத்திலிருந்து கொடுக்கப்பட்ட மரக்கன்றுகள் அனைத்து பங்குகளிலும் நடப்பட்டது.

**மறைவட்ட குருக்களின் கூடுகை**

மறை வட்ட முதன்மை குரு பேரருட் தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்களின் தலைமையில் மறைவட்ட குருக்கள் கூடுகையானது பனச்சமூடு தேவாலயத்தில் வைத்து 13-06-2022 அன்று நடத்தப்பட்டது.



**மறைவட்ட குருக்கள் திருப்பலி**

மறைவட்ட குருக்கள் நடத்தும் சிறப்பு திருப்பலி இம்மாதம் செண்பக தரிசு பங்கில் வைத்து வெகு விமரிசையாக 05-06-2022 அன்று நடத்தப்பட்டது. பங்குதந்தை அருள்தந்தை. அபின்சன் அலெக்ஸ் அனைத்து நிகழ்வுகளையும் சீராக ஒழுங்கமைத்து நிகழ்வினை சிறப்பாக்கினார்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை தோமஸ் காவுவிளை
ஜூலை 03



அருட்தந்தை அலெக்ஸ் குமார்
ஜூலை 17



அருட்தந்தை அபின்சன் அலெக்ஸ்
ஜூலை 17



அருட்தந்தை ஜிபு மேத்யூ
ஜூலை 25

# ஆயரின் ஜூன் மாத நிகழ்வுகள்



1 ➤ இறச்சக்குளம் அதிதூதர் மிக்கேல் திருத்தலத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி ஏஞ்சலின் பியோ அவர்களின் அர்ப்பண வாழ்வின் நன்றித்திருப்பலி மற்றும் வாழ்த்து கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

4 ➤ ஆயர் இல்லத்தில் வைத்த நடைபெற்ற மேய்ப்புபணி அறிவுரை குழு கூடுகைக்கு தலைமைத்தாங்கி, புதிதாக நியமனம் பெற்ற குருகுல முதல்வர் மற்றும் மறைமாவட்ட ஆவண காப்பாளர் அவர்களின் பெயர்களை வெளியீடு செய்தார்.

4 ➤ புனித வின்சென்ட் தே பவுல் மார்த்தாண்டம் மத்திய சபையின் புது பணி பொறுப்பாளர்களின் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

5 ➤ புனித தேவசகாயம் புனிதர் பட்ட தேசிய நன்றிவிழா திருப்பலியில் கலந்துக் கொண்டார்.

6 ➤ புதிதாக இளம் குருமடத்தில் சேர விரும்பும் மாணவர்களுக்கான நேர்முக தேர்வை நடத்தினார்.

7 ➤ ஆயர் இல்லத்தில் வைத்த நடைபற்ற குருக்களின் மாதாந்திர தியானத்தில் கலந்துக் கொண்டு புதிதாக நியமனம் பெற்ற குருகுல முதல்வர் மற்றும் மறைமாவட்ட செயலர் அவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கினார்.



10 ➤ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப் பெற்ற college board meeting -ல் தலைமைத் தாங்கி முன்னோக்கிய பயணத்திற்கான அறிவுரைகளை வழங்கினார்.

10 ➤ மார் எப்ரேம் வளாகத்தில் அமைந்துள்ள சிறப்பு பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட பொழுதுபோக்கு பூங்காவை திறந்து வைத்தார்.

11 ➤ வலியவிளை தூய அந்தோணியார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

11 ➤ திருத்துவபுரம் தூய மூவோரிறைவன் ஆலயத்தில் மாலை வழிபாட்டு ஆராதனையை தலைமையேற்று நடத்தி இறைசெய்தி வழங்கினார்.

12 ➤ அணக்கரை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

14 ➤ கோட்டார் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் செயற்குழு கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

16 ➤ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற School Board Meeting -ல் தலைமைத் தாங்கினார்.

18 ➤ மலங்கரை கத்தோலிக்க கல்லூரி ஆண்டுவிழாவவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

18 ➤ கீழ்மாங்கோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

19 ➤ சாரூர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

19 ➤ திருத்தூவபுரம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற Legion of Mary இயக்கத்தின் நூற்றாண்டு வழா திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

20 ➢ கடையாலுமூடு ஆலய திருவிழா திருப்பலியில் கலந்துக்கொண்டு 'செவிமடுத்து செயல்பட்டு வாழ்' என்ற மையகருத்தில் மறையுரையாற்றினார்.

25 ➢ மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான குடும்ப மாநாட்டில் கலந்துக் கொண்ட தம்பதிகளுக்கு குடும்பத்தின்மேன்மையை குறித்து வகுப்பு எடுத்தார்.

26 ➢ குருமட தினத்தை முன்னிட்டு திருவனந்தபுரம் பட்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

26 ➢ களியக்காவிளை மறைவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு 'நம்பிக்கையின் 12 உண்மைகள்' என்ற தலைப்பில் சிறப்பு வகுப்பு எடுத்தார்.

26 ➢ குழித்துறை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

27 ➢ மாத்தூர்கோணம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

28 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் துறவற இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

29 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட தினம் மற்றும் ஆயரின் பெயர் கொண்ட விழாவை முன்னிட்டு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

30 ➢ மேதகு ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ் ஆண்டகை அவர்களின் பணி பொறுப்பு ஏற்பு நிகழ்வில் கலந்துக் கொண்டார்.



## இம்மாதம் நினைவு கூர

ஜூலை 2021

1 - தலைமைக்குரு ஆரோன்

3 - பெந்தக்கோஸ்துக்குப்பின் நான்காம் ஞாயிறு
துக்றோனோ (மார் தோமாவின் நினைவு நாள்)
ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் பெயர்விழா
குடும்ப தினம்

3


5 - எழுபத்திரண்டு அறிவிப்பாளர்கள்

6 - புலிக்கோட்டில் ஜோசப் ரம்பானின் நினைவு
புனித மரிய கொரேத்தி

6


10 - பெந்தக்கோஸ்துக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு

11 - புனித பெனடிக்ட்

13 - மார் சீலாஸ்

15 - இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு (1953)
மார் குரியாக்கோஸ்
மார்த்தா யூலித்தியம்மாள்

15


16 - புனித கார்மேல் அன்னை

16


17 - பெந்தக்கோஸ்துக்குப்பின் ஆறாம் ஞாயிறு
தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் திருநிலைப்பாடு

19 - புனித மக்ரீனா

20 - இறைவாக்கினர் எலியா

22 - புனித மகதலா மரியாள்

22


23 - இறைவாக்கினர் எசேக்கியேல்

24 - பெந்தக்கோஸ்துக்குப்பின் ஏழாம் ஞாயிறு

28 - புனித அல்போன்சா

29 - பெத்தானியாவின் மார்த்தாவும் மரியாவும் லாசரும்

28


31 - பெந்தக்கோஸ்துக்குப்பின் எட்டாம் ஞாயிறு
லெயோலாவின் புனித இக்னேஷியஸ்


BIBLE
புனித அல்போன்சாவே
எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும்
ஜூலை
28


the OUR LADY of MOUNT CARMEL novena
புனித கார்மல் அன்னை
ஜூலை
16


பெயர்விழா நல்வாழ்த்துக்கள்
ஜூலை
03
ஜோசப் மார் தோமஸ்
பத்தேரி மறைமாவட்ட ஆயர்